# பக்தர்களுக்கு சில கேள்விகள்

# A few questions to the devotees

1. உலகைப் படைத்தது கடவுள் எனில் கடவுளைப் படைத்தது யார்?
1. If God created the universe, who created God?

2. நடமாடும் மனிதனுக்கு ஒண்டக் குடிசையில்லை. ஆனால் நடமாடாத கற்சிலைக்கு கோயில் ஒரு கேடா?
2. When there is no roof for moving humans to rest, is the temple a need for the immovable stone statue?

3. குழந்தை பெறுவது கடவுள் செயல் என்றால் விதவையும், வேசியும் குழந்தை பெறுவது யார் செயல் ? ஏன்?
3. If childbirth is God's act, widows and sex workers delivering are whose act? Why?

4. கடவுளர் படை இருக்க, எல்லையில் காவற்படையினர் ஏன்?
4. When God's army exists, why does the military guard the border?

5. எல்லாம் வல்ல கடவுளின் கோயிலுக்குப் பூட்டும், காவலும் ஏன்?
5. Why does the mighty almighty need lock and guard?

6. எல்லாம் அவன் செயல் என்றால் புயலும், வெள்ளமும் எவன் செயல்?
6. If everything is God's act, then whose actions are cyclones and floods?

7. ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம் எனில், முதலாளியும் தொழிலாளியும், பார்ப்பானும் ,பறையனும் ஏன்?
7. If in God's creation, all are equal, why is there a divide, capitalist and laborers, parpaans [1] and pariahs?

8. பத்து அவதாரங்கள் எடுத்த கடவுள் விலைவாசியை குறைக்க
ஒரு அவதாரம் கூட எடுக்காதது ஏன்?

8. Why do ten times descended God and don't descend once to control commodity price?

9. அவனன்றி ஓரணுவும் அசையாது எனில், கோவில் சிலை
வெளிநாடு செல்வது எவன் செயல்?
9. If no atom moves without God, then because of whose act does temple statues travel abroad?

10. அன்பே உருவான கடவுளுக்கு கொலைக்கருவிகள் எதற்கு?

10. Why does the embodiment of love, God need lethal weapons?

11. குழந்தைகளைப் படைப்பது கடவுள் சக்தி என்றால், குடும்பக் கட்டுப்பாடு செய்த பின் அவனால் படைக்க முடியுமா?
11. If childbirth is God's power, can God create birth after family planning?

12. அணுவில் இருக்கும் ஆண்டவன் அணுகுண்டில் இல்லையா?
12. Is God in an atom, absent in the atom bomb?

13. ஆண்டவன் உண்பதாக உணவு படைக்கின்றாயே! அது மலங்கழிக்காதா?
13. You offer food to God, doesn't it excrete?

14. கடவுளை அவன் என்பதா? அவள் என்பதா? அது என்பதா?
14. Is the God He? She?(They?) Or It?

15. விதிப்படி எல்லாம் நடக்கும் போது வீணாக ஆண்டவன் ஏன்?
15. If destiny drives everything, why do you need God?

16. பொது நன்மைக்காக கடவுளிடம் வரம் கேட்ட பக்தர்கள் யாரையாவது காட்ட முடியுமா?
16. Show me a devotee who asked boon for the public good?

17. சக்தியுள்ள கடவுளாக இருந்தால் நற்கருத்துக்களை மனிதனுடைய அறிவிலேயே புகுத்தி இருக்கலாமே?
17. If God is powerful, why didn't God imbibe good thoughts in human knowledge?

18. கல்விக் கடவுள் சரசுவதி பிறந்த நாட்டில் தற்குறிகள் இருப்பது ஏன்?
18. Why do illiterates exist in the birthplace of Saraswathi, Goddess of knowledge?

19. கடவுளர் கூட்டம் அதிகம் உள்ள நமது நாட்டில் வறுமையும், அறியாமையும் அதிகம் ஏன்?
19. Why do poverty and ignorance overflow in the country full of devotes?

20. முப்பத்து முக்கோடி தேவர்கள் இருந்தும் இந்தியாவில் மூன்று கோடிப்பேருக்கு உணவும் வேலையும் இல்லையே ஏன்?
20. Why are there no food and jobs for three crores people in India, even when there are thirty crore gods?

21. ஆத்திகனைப் படைத்த கடவுள், நாத்திகனைப் படைத்தது ஏன்?
21. God, who created theists, why did God create atheists?

22. பசியால் வாடும் குழந்தைக்குப் பால் கிடைக்காத நாட்டில் கல் பொம்மைக்குப் பால் அபிஷேகம் ஒரு கேடா?
22. When there is no milk for the crying baby, why anoint milk in a stone statue?

23. கடவுளாக வந்த பன்றியையும் மீனையும் உணவாக உண்ணலாமா?
23. Is it fair to consume God who descended as pig and fish?

24. கடவுளர் படங்களை நாத்திகர்கள் கொளுத்தினால் அலரும் பக்தர்கள், கடவுள் படம் போட்டபட்டாசுகளை கொளுத்தலாமா?
24. When atheists burn God's image, the devotees are angry. Can devotees burn the crackers with God's image?

25. மயிரை மட்டும் கடவுளுக்குக் காணிக்கை தரும் பக்தர்கள் கையேயோ காலையோ காணிக்கையாகத் தருவதில்லையே ஏன்?
25. The devotees who offer hair to God, why not donate hands or legs?

26. திருப்புகழைப்பாடப்பாட வாய் மணக்கும் என்று கூறும் பக்தர்கள், பல் விளக்காமல் இருப்பார்களா?
26. The devotees who claim, singing Thirupugal smells fragrance, will they stop brushing?

27. பிள்ளையார் போல் பிள்ளை பிறந்தால் கொஞ்சுவீர்களா? அஞ்சுவீர்களா?
27. When the baby is born similar to Pillayar [2], will you prattle or fear?

28. நோய்கள் கடவுள் கொடுக்கும் தண்டனையே என்று கூறும் பக்தர்கள் நோய் வந்தவுடன் டாக்டரிடம் ஓடுவது ஏன்?
28. As devotees say, diseases are God's punishment, then why do they rush to the doctor as soon as they are diseased?

29. தமிழ் புரியாத கடவுளுக்குத் தமிழ் நாட்டில் என்ன வேலை?
29. What is God's purpose in Tamil Nadu, who doesn't understand Tamil?

30. எட்டு கிலோ கடவுள் பொம்மைக்கு எண்பதாயிரம் கிலோ தேர் தேவையா?
30. Do you need an eighty kilograms chariot for eight kilograms of God's statue?

31. அம்மை நோயைத் தடுப்பது ஆத்தாளா? ஆஸ்பத்திரியா?
31. Who prevents smallpox, Mari Amman [3], or hospital?

32. கல்விக்குக் காரணம் சரஸ்வதியா? ஆசிரியரா?
32. Who is responsible for education? Saraswathy or Teacher?

33. பக்தியுள்ளவன் படிக்காமல் பாஸ் ஆவானா?

33. Can a devotee pass the examination without studying?

34. காலையில் கருட தரிசனம் செய்யும் பக்தர்கள், கருடன் கோழிக்
குஞ்சை தூக்கிச்சென்றால் கல்லால் அடிப்பது ஏன்?
34. The devotees in the morning sight(darshan) brahminy kite(Garudan) in the sky.
When a brahimy kite picks up the chicken, why do devotees stone?

35. கோகுல கண்ணன் இன்று பிறந்தால் கோபிகள் ரெடியா?
35. Today, If Gokula Kannan is born, are gopis ready?

36. நாற்பத்தொரு நாட்கள் ஒழுக்கமாக இருக்கும் அய்யப்பன்
பக்தர்கள் மற்றநாட்களில் எப்படி இருப்பார்கள்?
36. Ayyappan devotees follow ascetic life for forty days. How do they behave for the rest of the year?

37. அய்யப்பனை நம்பிக் கேரளாவுக்குப் போகும் பக்தர்களே,
தமிழ் நாட்டுக் கடவுள்களை என்ன செய்யலாம்.
37. My dear devotees, who visit Ayyappan in Kerala, what shall we do for gods in Tamil Nadu?

38. அக்கினி பகவானை வணங்கும் பக்தர்கள், வீடு தீப்பற்றி எரிந்தால் அலருவது ஏன்?
38. Devotees, who worship fire, why do you scream when your house is on fire?

39. பார்ப்பான்- பாதிரி - முல்லா ஆகியோர் பரலோகத் தபால் காரர்களா?
39. Are parpaans, pastors, and mullahs messengers of heaven?

40. விண்வெளிப் பயண நாடுகளில் ஆயுத பூஜை உண்டா ?
40. Do space travel countries celebrate Ayutha Pooja(Vijayadhasami)?

41. ருசியா, சீனா ஆகிய நாடுகளில் கடவுள் வாழ முடியாததற்குக் காரணம் என்ன?
41. What are the conditions prohibiting God to live in Russia and China?

42. மந்திரத்தால் தாலியைக் கொண்டுவருவதாகக் கூறும் சாயி
பாபா, மந்திரத்தால் உயிர் உள்ள யானையைக்கொண்டு வந்து
காட்டுவானா?
42. Sai Baba, with mantras, brings a Nuptial thread(Thalli), can he bring a live elephant in front?

43. பச்சை இரத்தம் குடித்துக் காட்டும் பூசாரி பாலிடாயல் குடித்துக்
காட்டுவானா?
43. The priest who drinks raw blood, can he drink the poison?

44. சிவாய நம என்றால் அபாயம் இல்லை என்போர் மின் சாரத்தைத் தொடுவார்காளா?
44. The devotees who claim Nama Shivaya cures danger, will they touch electricity?

45. தீக்குண்டம் மிதிப்பது தெய்வ சக்தி என்றால், அதில் படுத்து உருண்டு காட்டுவார்களா?
45. If firewalking is God's power, will devotees demonstrate rolling in the fire?

46. தீச்சட்டி எடுப்பது கடவுள் சக்தி என்றால் பக்தர்கள் கொதிக்கும் எண்ணெயில் கைவிடத் தயாரா?
46. If carrying a fire-pot is because of divine power, are devotees ready to dip in the boiling oil?

47. ஆடு கோழி ஆகிய வீட்டு மிருகங்களைக் கடவுளுக்கு பலி கொடுக்கும் பக்தர்கள், புலி, சிங்கம் ஆகிய காட்டு மிருகங்களை பலி கொடுப்பது இல்லையே ஏன்? பயமா?
47. The devotees offer sacrificial goat, chicken, and domestic animals. Why don't they offer a tiger, lion, and other wild animals? Are they afraid?

48. எந்த பார்ப்பனத்தியாவது காவடி எடுத்து ஆடியது உண்டா ?
48: Did any paarpaan ever perform a kavadi [4] dance?

49. எந்த பார்ப்பனத்தியாவது சாமி, பேய் வந்து ஆடியது உண்டா ?
49. Has any paarpaan performed ghost dance  or spirit dance [5]?

50. ஜாதகப் பொருத்தம் பார்த்துச் செய்யும் திருமண வாழ்க்கையில்
தரித்திரமும் , சண்டையும், சாவும் வரலாமா?
50. Why do married couples fight, suffer from poverty, and die even after precise horoscope matching?

51. நல்ல நாளும், நேரமும் ஜாதகமும், சகுனமும் பார்த்துப் பார்த்து
செய்கின்ற செயல்கள் பாழாய் போவது என்?
51. Why do deeds fail even after looking for an auspicious day, time, horoscope, and omens?

52. சோதிடனும், மந்திரவாதியும் இருக்கும்போது காவல் நிலையம்
தேவைதானா?
52. Why do you need a police station when astrologers and magicians exist?

53. கள்ளப் பணம் உள்ள இடத்தைச் சோதிடன் கூறுவானா?
53. Can an astrologer spot where the counterfeit currency resides?

54. இராகு காலமும் சகுனமும், நம் பாரத நாட்டில் தானா?
54. Are rahu kaalam, omen followed only in our India?

55. இந்தியாவைத் தவிர எந்தச் சோசலிச நாட்டிலாவது சோதிடம்
இருக்கிறதா?
55. Other than India, does astrology exist in any socialist country?

56. காந்தி, கென்னடி, இந்திரா, ராஜூவ்படுகொலை நடக்கும்
என்பதைச் சோதிடர் கூறாதது ஏன்?
56. Why didn't astrologers foretell the killing of Gandhi, Kennedy, Indira, and Rajiv?

57. ஆண்களின் மறுமணத்தை ஏற்கும் உலகம் பெண்களின் மறுமணத்தைப் பழிப்பது ஏன்?
57. When the world accepts men's remarriage, why do they curse women's remarriage?

58. கணவனை இழந்த பெண்ணின் பெயர் விதவை என்றால் மனைவியை இழந்த ஆணின் பெயர் என்ன?
58. If the name of the woman after their spouse's death is the widow, what is the name of the man after their spouse's death?

59. மணமான பெண் என்பதன் அடையாளத்திற்கு தாலி என்றால் மணமான ஆண் என்று அறிய அவனுக்கத் தாலி எங்கே?
59. Nuptial thread(Thalli) is the symbol of women's wedding, what's the symbol of the men's wedding?

60. ஆண் பெயருக்குப் பின்னால் சாதிவால் போடுவோர் பெண்
பெயருக்குப் பின்னால் போடாதது ஏன்?
60. When men add a caste surname, why didn't women add a caste surname?

61. மறுபிறப்பு என்று இருக்கும் போது திதி கொடுப்பது யாருக்கு?
61. When rebirth exists, who do you perform thithi to?

62. மறு பிறப்புப்படி உலகில் உயிர்கள் பிறப்பது உண்மையானால்
உலக ஜனத் தொகை அதிகரிப்பது ஏன்?
62: On the concept of rebirth, if lives are born, why do the population explode?

63. இந்து மதத்தைத் தோற்றுவித்தவர் யார்? அதற்கு ஆதாரம் உண்டா ?
63. Who is the founder of Hinduism? What is the evidence for it?

64. அய்வரை மணந்த திரௌபதி ஒரு பத்தினியா?
64. Is Dhraupthi, a chaste wife with five husbands?

65. இராமனைச் செருப்பால் அடிப்பதற்கு அலரும் பக்தர்களே, நீங்கள்
தினமும் பூமா தேவியை செருப்பால் மிதிக்கலாமா?
65. The devotees who panic when I beat Ram, are you fine trampling Bhooma Devi in slippers every day?

66. தசரதனுக்கு அறுபதாயிரம் மனைவிகள் என்பது அறிவுடையோர்
ஏற்கும் செய்தியா?
66. Do wise people agree, Dhasaradhan married sixty thousand wives?

67. தேவர்களாலும், முனிவர்களாலும் கணிக்கப்பட்ட இராமன்-சீதை
முகூர்த்தம் வனவாசத்தில் கொண்டுபோயா விடவேண்டும்?
67. Devas and saints arranged Raman - Sita wedding on auspicious time. Should it lead to exile?

68. அனுமான் இலங்கைக்குத் தீயிட்டது அறச்செயலா?
68. Was it an ethical act for Hanuman to light Lanka in the fire?

69. இராவணன் தங்கையை மானபங்கப்படுத்திய இராமன் எப்படி ஒழுக்கமுள்ள கடவுள் ஆவான்?
69. Raman disgraced Ravanan's sister. How is he a virtuous God?

70. இராவணன், விரும்பாத பெண்ணைக் கைத் தொட்டால் தலைசுக்கு நூறாகும் - உடல் பற்றி எரியும் என்பது புராணம். ஆனால் சீதை விஷயத்தில் அது ஏன் பலிக்கவில்லை ?
70. According to the Purana, when Ravanan touches a girl without her consent, his head will explode into pieces. Why did the curse fail in Sita's case?

71. வில்லாளன் ஆகிய இராமன், வாலியை மறைவில் நின்று
கொன்றது வீரச்செயல் ஆகுமா?
71. Raman, the archer, killed Vaali hiding, is it bravery?

72. தவம் செய்த சம்பூகனாகிய திராவிடனை இராமன் கொன்றது
நீதியாகுமா?
72. Is it fair for Raman to kill Dravidian Shambhukan for offering tapas?

73. இராமனும் இலக்குவனும் சரையூ நதியில் விழுந்து தற்கொலை
செய்து கொள்ள முயற்சித்தார்களே! அது கடவுள் தன்மையா?
73. Raman and Laxman tried to commit suicide in the Sarayu river. Is it the nature of God?

74. வால்மீகி இராமாயணம் - கம்பராமாயணம் - துளசி இராமாயணம்
இவற்றில் எது உண்மையான இராமன் கதை?
74. Out of Valmiki Ramayanam, Kambar Ramayanam, Tulsi Ramayanam, which one is the authentic Raman's story?

75. அறுபத்தி மூன்று நாயன்மார்கள் , பன்னிரண்டு ஆழ்வார்களுக்குப்
பிறகு அடுத்த நால்வகைச் சாதிகளையும் நானே படைத்தேன் என்று கீதையில் கண்ணன் முழங்குகிறானே!
அவமானமில்லையா?
75. After sixty-three Nayanars(teachers of Shiva), twelve Alwars(teachers of Vishnu), Kannan, proclaimed he created the four-fold caste system(varna) in Bhagavad Gita. No disgrace?

76. நீ வணங்கும் முருகன் கலப்புத் திருமணம் செய்யும் போது
மனிதன் கலப்புத் திருமணம் செய்தால் வெறுப்பதேன்?
76. When your Lord Murugan marries out of the caste,
Why do you hate when a Hindu engages in intercaste marriage?

77. கிருஷ்ணன் போர்க்களத்தில் கீதா உபதேசம் செய்து முடியும் வரை
கௌரவர்கள் பூ பறித்துக்கொண்டிருந்தார்களா?

77. Till Krishna was delivering Geetha counsel in war, where were Gaurvas? Were they collecting flowers?

78. நாத்திகச் சூனாவிலும், ருசியாவிலும் கலைமகளும் இல்லை , விலை
மகளும் இல்லையே!ஏன்?
78. In atheist China, Russia, there are no Saraswatis and sex-workers! Why?

79. (பைபிளில்) ஒளியைப் படைத்தது கடவுள் என்றால் இருளைப்
படைத்தது யார்?
79. (In the Bible), Jesus created light, then who created darkness?

80. பூமி தட்டை என்று கூறுகிறது பைபிள் (பழைய ஏற்பாடு )
இக்கருத்தை ஏற்றுக்கொண்ட கிறித்துவர்கள் எத்தனை பேர்?
80. As per the Bible, the earth is flat. How many Christians accept the statement?

81. ஜபம் செய்தே நோயைக் குணப்படுத்துவதாகக் கூறும் பாதிரியார்கள் இருக்கும்போது கிறித்துவ
மருத்துவமனைகளில் டாக்டர்கள் எதற்கு?
81. When pastors say prayers can heal the disease, why do Christian hospitals employ doctors?

82. பேயைப் (சாத்தானைப்) படைத்தது யார்? அதை ஏன் படைக்க
வேண்டும்? ஏன் எதிர்க்க வேண்டும்?
82. Who created the devil(satan)? Why did they create the devil? Why should we oppose the devil?

83. கன்னி , கணவனில்லாமல் தாய் ஆனால், கடவுள் செயல் (பரிசுத்த ஆவி) என்று சும்மா இருப்பாயா?
83. When a damsel delivers a baby without a husband, will you patiently call it as a godly act(holy ghost)?

84. ஏசுவின் பிறப்பை டாக்டர்கள் ஏற்றுக் கொள்கிறார்களா?
84. Do doctors accept Jesus's birth?

85. நற்கருணையில் (ரொட்டியில்) இரத்தமும், சரீரமும் எங்கே
இருக்கின்றன? யோசனை செய்?
85. Where is blood and flesh in Eucharist? Think?

86. தேவர்கள் இருக்கும்போது பாவத்தை மன்னிக்கப் பாதிரிகள்
தேவையா?
86. When devas exist, why do we need pastors to forgive sins?

87. ஞான ஸ்நானம் பெற்றால் அய்ம்பது கோடி இந்துக்களும்
மோட்சம் போக முடியுமா? இதற்கு முன் மோட்சம் போன
பாதிரிகள் எத்தனை பேர்?

87. If fifty crore Hindus are purified, can they attain salvation? Previously, how many priests attained salvation?

88. சொர்க்கத்திற்கு, மோட்சத்திற்கு, வைகுண்டத்திற்கு, சிவ
லோகத்திற்கு போக வேண்டும் என்று விரும்பும் மனிதன் இறந்த
பின்னால் அவனது உறவினர்கள் வருந்தி அழுவது ஏன்?
88. Why do relatives of the deceased cry, when the deceased wishes to reach heaven, Vishnu's heaven, Shiva's heaven and attain salvation?

89. ஆறுகாலபூஜையும், அய்ந்து வேளை தொழுகையும், முழு இரவு
ஜெபமும் செய்வதால் ஆகப்போவது என்ன? பொழுதும்
பொருளும் வீணாகும் வேறென்ன?
89. What are the outcomes of the six-time prayers in Hindu temples, five times prayers of Muslims, the whole night prayer of Christians? What else, other than wasting time and material?

90. திருநீர் , துர்நீரை அகற்றுகிறதாம் அப்படியானால் இரும்புப்பெட்டி
வியாபாரத்தராசு இவற்றிற்கும் திருநீரு பூசப்படுகிறதே இவற்றிலும் துர்நீரும், விசக்கிருமிகளும்
புகுந்துவிட்டதா? சரி துர்நீர் தோன்றும் கம்புக்கூடு அதைவிட மோசமாக சிறு நீர் தோன்றும் உறுப்புகளிலும்
திருநீர் பூசி அவற்றை அகற்ற முயற்சி செய்யாதது
ஏன்?
90. If holy ash removes harmful fluids and germ, why do you smear holy ash in an iron safe and weight scale? Did harmful fluids and germs invade these? Then why haven't you applied holy ash in the organs secreting harmful fluids?

91. சங்கராச்சாரியார், கிருபானந்தவாரியார், சாமிகள் எல்லோரும்
எவ்வளவு திருநீர் அணிந்திருந்தாலும் ஏன் வியாதியால்
அவதியுற்றனர்?
91. Even when Swami Sankaracharya, Swami Kirubananda Variyar smear holy ash, why do they suffer from the disease?

92. மஞ்சள் குங்குமத்தோடுதான் ஒரு பெண் நீடுழி வாழ முடியுமா? உலகில் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து
கொண்டிருக்கும் பெண்கள் எல்லோரும் மஞ்சள் குங்குமத்தோடு தான் அலைகிறார்களா?
92. Can a woman long live with turmeric and traditional vermilion? Do happy women all over the world roam with turmeric and vermillion in their forehead?

93. மணமகளை வலது காலை எடுத்து வைத்து வரச்சொல்கிறீர்கள்
ஆனால் நாட்டை பாதுகாக்கும் படையினரோ முதலில் இடது காலை எடுத்து வைத்து முன்னேறுகின்றனர்
இரண்டு காலில் நல்லது கெட்டது என்று ஏதாவது உண்டா ?
93. You tell the bride to place her right leg first while entering the bridegroom's house. But the country's army men move their left leg as the first move. In the two legs, is there a good and bad leg?

94. ஒருகுழந்தை பிறக்கும்போது இருக்கின்ற கிரகங்களின் நிலைக்கு ஏற்பவே அக்குழந்தையின் வாழ்க்கை அமையும் என்றால், அதே நேரத்தில் பிறக்கின்ற அத்தனை குழந்தைகளின் வாழ்க்கையும் ஒரே மாதிரி இருக்கவேண்டுமே, அவ்வாறு இருக்கிறதா?
பட்டியலிட்டு பரிசோதனை செய்யத்தயாரா?
94. If the planetary positions determine the life of a baby, then the lives of all the babies born during the same time should be similar. Does this happen? Did anyone track and test?

95. ஒரு குழந்தை பிறந்தவுடன் இறந்து போகிறது. அப்படியானால்
அந்த நேரத்தில் பிறக்கின்ற அத்தனை குழந்தைகளும் இறந்து
போகவேண்டும், அப்படி நடக்கிறதா?
95. A baby dies after birth. Then all the babies born in the time should also die. Does it happen?

96. பிறந்த நேரம் எது என்பதில் தெளிவு இருந்தால் மட்டுமே
சோதிடம் கணிக்க முடியும் என்பதால் பிறந்த நேரமே முக்கியமாகிறது. குழந்தைக்கான கரு உருவான நேரத்தை எடுத்துக் கொள்வதா?
பிறக்கும் குழந்தையின் தலை வெளியில் தெரியிமே அந்த நேரமா?
குழந்தை முழுவதும் வெளியில் தெரியுமே அந்த நேரமா?
தொப்புள் கொடி துண்டிக்கப்பட்டு தாயின் தொடர்பு விலக்கப்பட்ட நேரமா?
அறுவைச் சிகிச்சையெனில் வயிற்றைப் பிளந்து குழந்தையை வெளியில் எடுத்த நேரமா? குறைப் பிரசவத்தில் கருவியில் வைத்திருக்கிறார்களே அதில் பிறந்த நேரம் எது? தாயிடமிருந்து பிரிக்கப்பட்ட நேரமா அல்லது கருவியை விட்டு வெளியில் எடுக்கும் நேரமா?
96. Only if there is clarity on the timing of the birth astrology can predict, then birth time becomes crucial. What is birth time?

- Is it the time when a fetus formed?
- Is it the time when a baby's head first protruded?
- Is it the time when a child's whole body appeared?
- Is it the time when the umbilical cord is cut?
- Is it the operation time in Caesarean?
- Is it the time when a child is placed in an incubator in preterm birth?
- Is it the time when a child lifted out of the incubator in preterm birth?
- Is it time when the child is separated from the mother?

97. பிறக்கின்ற நேரத்தில் கிரகங்கள் இருக்கின்ற நிலைக்கேற்பவே
ஒருவனுடைய வாழ்க்கை அமையும் என்றால் கடவுளுக்கும்,
தலைவிதிக்கும் பூர்வஜென்ம பலனுக்கும் என்ன வேலை?
97. If planetary positions determine one's life, what's the role of God, destiny, and past birth benefits?

98. பிறந்த நேரம், கிரக நிலைக்கேற்ப தான் வாழ்க்கை என்ற ஆன
பிறகு கடவுள் பிரார்த்தனை ஏன்? கணக்கற்ற சாஸ்திர முயற்சி
தான் ஏன்? இவற்றால் அதை மாற்றமுடியுமா?
98. When the time of birth and planetary positions determines life, then why do we pray to God? Why are there countless Shastra practices? Can prayers and practices change destiny?

99. பிறந்த போதே நம் வாழ்வு இப்படித்தான் என்று தீர்மான
மாகிவிட்ட பிறகு நம் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் இராகு காலம் எமகண்டம், அஷ்டமி, நவமி,
இவைபோன்ற நேரம் காலத்தை ஏன் பார்க்கவேண்டும்?
99. If life is destined after birth, then, why do we look for an inauspicious time like Rahu kaalam, Ashtami, Navami, Yemma Kandam?

100. கிரக நிலைப்படித்தான் வாழ்வு என்று சோதிடத்தை நம்பியபிறகு
கடவுளுக்கு நம் வாழ்க்கையில் என்ன வேலை , என்ன பங்கு?
100. After believing in astrology's axiom, planetary positions govern life, what is the place for God in our lives?

101. இந்து மத அறிஞர்களும், வேத சாஸ்திரங்களை உருவாக்கிய
வித்தகர்களும், முனிவர்களும், ரிசிகளும் எப்படி பிறந்தார்கள் என்றால் கலைக்கோட்டு ரிசி மானுக்கும், காசிகர் குசத்திற்கும், ஜம்புகர் நரிக்கும், கவுதமர் மாட்டிற்கும் மாண்டவியர் தவளைக்கும், காங்கேயர் கழுதைக்கும், கவுனர் நாய்க்கும், காணதர் கோட்டானுக்கும், சுகர் கிளிக்கும், ஜாம்பவந்தர் கரடிக்கும், அஸ்வத்தாமன் குதிரைக்கும், அகத்தியர் குடத்திற்கும் பிறந்தார்களாம். இருபதாம் நூற்றாண்டிலும் இதை நம்பலாமா? எழுதியதை மாற்றாமல் மதப்பிரச்சாரம் செய்யலாமா?
101. When we enquire how the Hindu scholars, Veda Shastra authors, sages, and rishis were born. The answer is, they are born to Kalaikottur Rishi Deer, Kousik Kusam, Jambukar Jackal, Gouthamar Bull, Mandaviyar Frog, Kangaeyar Ass, Sounagar Dog, Ganathar Owl, Sugar Parrot, Jambuvantar Bear, Agasthiar Vessel, Aswathaman Horse. Is it believable in the twentieth century? Is it possible to spread religious preaching without modification?

102. முற்பிறவியில் செய்த செயல்களுக்கு ஏற்பத்தான் இப்பிறவி
வாழ்வை கடவுள் நமக்கு அளிக்கிறார் என்றால் அந்த முதல் பிறவியை அமைத்ததும் கடவுள் தானே அந்த முதல் பிறவி யிலேயே எல்லோரையும் நல்லவர்களாகப் படைக்க வேண்டியது தானே! ஒருவன் தவறு செய்யும் படியாகவும், இன்னொருவன் நல்லது செய்யும் படியாகவும் ஏன் படைக்க வேண்டும்?
102. The current birth depends on past birth by God. Then why didn't God create all of the beings good in their first birth! Why does God create one to do good and another to do evil?

103. ஒருவனைக் கெட்டவனாகப் படைத்து விட்டு அடுத்த பிறவியில் அவனுக்கு தண்டனையும் அளித்தால் அப்படிச் செய்கின்ற ஒன்றை இறைவன் எனலாமா?
103. After creating an evil man in the current birth and punishing him in his rebirth, can we call such a creator God?

104. இராணுவத்திலுள்ள வீரர்கள் ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கில்
இறக்கிறார்கள் அப்படியென்றால் அத்தனை பேர் கையிலும் உள்ள ஆயுள்ரேகை அன்றோடு அவர்கள் இறந்து போவார்கள் என்று காட்டுகிறதா?
104. Hundreds of soldiers die at the same time; does lifeline(palmistry) show their death at the exact time?

**Source**: http://dvkperiyar.com/wp-content/uploads/2015/08/42.pdf

**Notes**:

1. Paarpaan - Periyar used the word to denote brahmins
2. Pillayar - Another name for Ganesha or Vinayaka in Tamil Nadu.
3. Mariamman - A Tamil folk goddess focussed on rains and curing diseases like cholera, smallpox, and chicken pox.
4. Kavadi (burden) - is a ceremonial sacrifice and offering practiced by devotees during the worship of Lord Murugan
5. Spirit Dance - A form of worship when a spirit of the god enters the person and the person dances.

**Translated by: R. Kracekumar**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.